ET/SSS/2022(2023)/OL/62/T/Q/S-1

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | க.பொ.த. சாதாரண தரம் | 2022 (2023)

Student Seminar Series

மாணவர் கருத்தரங்கு தொடர்

Practice Paper - முன்னோடி வினாப்பத்திரம்

History

வரலாறு



Question Paper - I, II | வினாப்பத்திரம் - I, II (மொழிமூலம்-தமிழ்)

Nenasa

The National e-learning Portal for The General Education

தொலைக்கல்வி மேம்பாட்டு பிரிவு | தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය

கல்வி அமைச்சு

Ministry of Education, Sri Lanka

33	T	I

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர் - 2022 (2023)

G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)

ඉතිහාසය	I
வரலாறு	I
History	I

ஒரு மணித்தியாலம்

வரலாறு I

கவனிக்க

- எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடைக்குரிய இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. இலங்கையில் பாவனையில் இருந்த மிகப் பழைமையான நாணயம் பின்வருவனவற்றுள் எது?
   (1) யானை மற்றும் சுவஸ்திகா உருவம் பதித்த நாணயம் (2) கஜலக்ஷ்மி நாணயம்
   (3) புராண (4) தம்பமஸ்ஸ

2. இலங்கைக்கு வருகை தராது இலங்கை பற்றி எழுதிய எழுத்தாளர்களுள் ஒருவர்
   (1) மெகஸ்தனிஸ் (2) பாகியன் தேரர் (3) ரிபைரோ (4) பிலிப்ஸ் பல்டியஸ்

3. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த கரையோர வெட்டவெளிப் பிரதேசம்
   (1) மினிஹாகல்கந்த (2) பொத்தான (3) மடுல்சீமை (4) பெல்லன்பதி பெலஸ்ஸ

4. தென்னாசிய வலயம் முழுவதும் காலநிலை மாற்றத்தால் பாரிய மாற்றம் கண்டதாக குறிப்பிடப்படும் யுகம்
   (1) பிளைத்தோசின் யுகம் (2) மெகாலிதிக் யுகம்
   (3) ஹொலோசின் யுகம் (4) ஆரம்ப வரலாற்று யுகம்

- கீழே தரப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு 5ஆம், 6ஆம் வினாக்களுக்கு விடை தருக
  - A. பிராந்திய ஆட்சியாளர்கள் பலருடன் போரிட்டு அப்பிரதேசங்களைக் கைப்பற்றியமை.
  - B. புனித வெள்ளரசு மரக்கிளை நடப்படும் வைபவத்திற்கு சந்தனகாம, கதிர்காம பிரதேசத் தலைவர்கள் அழைக்கப்பட்டமை.
  - C. கலிங்க மாகனைத் தோற்கடித்தமை.
  - D. நாட்டில் கிராம எல்லைகளை வகுத்தமை.
  - E. கவிசிலுமின எனும் நூலை எழுதியமை.

5. பண்டுகாபய மன்னனுடன் தொடர்புடைய நிகழ்வுகளை மாத்திரம் கொண்ட விடையாக அமைவது
   (1) AB (2) AD (3) BD (4) CE

6. இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனுடன் தொடர்புடைய நிகழ்வுகளை மாத்திரம் கொண்ட விடையாக அமைவது
   (1) AB (2) AC (3) CE (4) BD

7. பண்டைய இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி செல்வத்திற்கு அதிபதியான குபேரக் கடவுளாக தன்னைக் கருதிக் கொண்ட காசியப்ப மன்னன் ஆட்சி மையமாக தெரிவு செய்து கொண்ட இடம்
   (1) இந்திரலோகம் (2) சீகிரியா (3) மலைநாடு (4) கங்கசிரிபுர

8. வசப மன்னனுக்குப் பின்னர் வங்கநாசிக்க திஸ்ஸ மன்னனுக்கு பின்வரும் எம்முறையின் கீழ் அரசுரிமை கிடைக்கப் பெற்றது
   (1) தாய்வழி அரசுரிமை (2) தந்தைவழி அரசுரிமை
   (3) அரசைக் கைப்பற்றுதல் (4) நாயக்கர் மரபுரிமை

9. முத்துகல்ல எனும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டில் எக்கைத்தொழிலை மேற்கொண்டவர் மஜ்ஜிம எனும் பெயரில் குறிப்பிடப்படுகின்றார்
   (1) கம்மாளர் (2) விவசாயி (3) மீனவர் (4) வர்த்தகர்

10. கி.பி 9ஆம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்றில் காணப்படும் விசிறி குறியீட்டினால் வெளிப்படுத்தப்படும் விடயம் யாது?
   (1) விகாரைக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவு. (2) அரசனால் வழங்கப்பட்ட கொடுப்பனவு.
   (3) கொடுப்பனவின் தூய்மை. (4) கொடுப்பனவுக்கு இடைஞ்சல் புரிதல் கூடாது.

11. பாதுகாப்பு, கலையம்சம், நீரியல் தொழினுட்பம் போன்றன தொடர்பில் சிறப்புமிக்க நிர்மாணமொன்றாக கருதப்படுவது.
   (1) குட்டம் பொய்கை (2) தாமரைப் பொய்கை (3) வட்டதாகே (4) சீகிரியா

12. குளமொன்றில் காணக்கூடிய "மொஹால்" எனும் தண்ணீர் விளக்கினால் ஆற்றப்பட்ட பணிதொடர்பில் மிகச் சரியான கூற்றாக அமைவது
   (1) குளத்திற்கு வரும் மேலதிக நீரைக் கட்டுப்படுத்தல்
   (2) குளத்திலிருந்து பயன்பாட்டிற்கான நீரை வெளியேற்றல்
   (3) குளத்து நீரினால் ஏற்படும் அமுக்கத்திலிருந்து குளக்கட்டைப் பாதுகாத்தல்
   (4) நீரைத் திறந்து விடுவதற்கு மடைக் கதவுக்குக் குறுக்காக அமைக்கப்பட்டுள்ள கற்றூணை அங்கும் இங்கும் நகர்த்துவதன் மூலம் தேவையான அளவு நீரை கால்வாய்க்கு திறந்து விடுதல்.

- கீழே தரப்பட்டுள்ள விடயங்களைக் கொண்டு 13, 14 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.
   A. அமுக்கப் பிரயோகத்தைப் பயன்படுத்துதல்.
   B. இயற்கையாக உருவாகும் அமுக்கத்தினால், மேலெழும் தண்ணீரின் உயரத்தில் வேறுபாடுகள் ஏற்படும் வகையில், பொருத்தப்பட்டிருக்கும் கருங்கல் துவாரங்களின் விட்டத்தின் அளவுகளில் மாற்றங்களை ஏற்படுத்துதல்.
   C. சிறிய கேத்திர கணித வடிவப் பாவனை.
   D. உயரத்திலிருந்து வாய்க்கால் ஒன்றின் மூலம் சமவெளியை நோக்கி ஓடும் நீரை திடீரெனத் தடுத்து கணிசமான அளவு அமுக்கத்தை ஏற்படுத்துதல்.
   E. நதிகளை மறித்து அணைகட்டி நீரைத் தேக்கி கால்வாய்களினூடாக தாழ் நிலங்களுக்கு கொண்டு செல்லல்.

13. வரலாற்றுக்கு முற்பட்ட கால தொழினுட்பம் தொடர்பில் மிகவும் பொருத்தமான விடையாக அமைவது
   (1) AC (2) AD (3) BD (4) CE

14. இலங்கையின் நீர்ப்பூங்கா தொழினுட்பம் தொடர்பில் மிகவும் பொருத்தமான விடையாக அமைவது
   (1) AB (2) AD (3) BD (4) CE

15. பண்டைய மன்னர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு தண்டனை முறைகளை நடைமுறைப்படுத்தியுள்ளனர். இது தொடர்பில் பொருத்தமற்ற கூற்றாக அமைவது
   (1) தவறு செய்த நபருக்கெதிராக தண்டனையை பெற்றுக் கொடுப்பதே பிரதான நோக்கமாகும்.
   (2) நபர்களை சரியான பாதையில் இட்டுச் செல்வதற்கான வழிமுறையொன்றாகும்.
   (3) தண்டனையை பாடமாகக் கொண்டு தவறிழைக்காது இருத்தல்.
   (4) தண்டனை மூலமாக கிடைக்கும் தண்டப் பணத்தினை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்துதல்.

16. லோகோபகார எனும் நூலின் எழுத்தாளர் வாசமற்ற காட்டுப் பூவிற்கு யாரை ஒப்பிடுகின்றார்?
(1) சமூக இணக்கப்பாடற்றோர்.
(2) அழகிய தோற்றத்தையுடையோர்.
(3) உருவத்தில், வாலிபத்தில் குணத்தில் மேம்பட்டவராயினும் தொழில் ரீதியான அறிவு இல்லாதோர்.
(4) கலைத் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றோர்.

- கீழே அட்டவணையில் A - F வரை தரப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு 17,18 ஆம் வினாக்களுக்கு விடை தருக

ஆட்சியாளன்	நிகழ்வுகள்	அடுத்து ஆட்சிபீடமேறியோர்
A. இரண்டாம் பராக்கிரமபாகு	C. தம்பதெனியாவில் தலதா மாளிகை நிறுவப்பட்டமை	E. பண்டித பராக்கிரமபாகு
B. ஆறாம் புவனேகபாகு	D. சிங்கள சங்கய கிளர்ச்சி	F. நான்காம் விஜயபாகு

17. தம்பதெனிய இராசதானியுடன் தொடர்புடைய விடயங்களை மாத்திரம் கொண்ட விடையாக அமைவது
(1) ACB (2) ACF (3) BCE (4) BDE

18. கோட்டை இராசதானியுடன் தொடர்புடைய விடயங்களை மாத்திரம் கொண்ட விடையாக அமைவது
(1) ACF (2) BDE (3) BCE (4) CDE

19. கண்டி இராசதானியில் சிங்கள அரச வம்சத்தினரது ஆட்சி வீழ்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணியாக அமைவது.
(1) ஆங்கிலேயரால் கண்டி இராசதானி கைப்பற்றப்பட்டமை.
(2) கண்டி பிரதானிகள் நாயக்க வம்சத்தினருடன் நட்புறவுடன் செயற்பட்டமை.
(3) ஸ்ரீ விஜய இராஜசிங்கன் தந்திரோபாயமாக ஆட்சியைக் கைப்பற்றியமை.
(4) வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் ஆட்சியுரிமைக்கான வாரிசின்றி இறந்தமை.

20. கண்டி இராசதானியில் கிராமத்தவர்கள் பரம்பரை பரம்பரையாக அனுபவிப்பதற்காக வழங்கப்பட்ட நிலம்
(1) கபடாகம் (2) நிந்தகம் (3) விகாரகம் (4) பரவேனிகம்

21. கண்டி இராசதானியின் நிர்வாக ஒழுங்கமைப்பிற்கு உரிய வரிகள் சில நிரல் i இலும் அவற்றுக்குரிய பணிகள் நிரல் ii இலும் தரப்பட்டுள்ளன. நிரல் i இற்கு ஏற்ப நிரல் ii இனை ஒழுங்குபடுத்தும் போது வரும் சரியான விடை

நிரல் - i	நிரல் - ii
(1) மடிகே பத்த (2) படஹெல பத்த (3) ரீ பத்த (4) ஹெந்த பத்த	A. நெசவு B. சலவை C. போக்குவரத்து D. வனைதல்

(1) ABCD (2) CBDA (3) BCAD (4) CDBA

22. போர்த்துக்கேயருக்கெதிரான போர்களின் போது முஸ்லிம் ஆட்சியாளனான சமோரின் என்பவனின் உதவியைப் பெற்றுக் கொண்ட ஆட்சியாளன்
(1) வீதிய பண்டார (2) மாயாதுன்னை (3) 7ஆம் புவனேகபாகு (4) தர்மபாலன்

- கீழே ABCD என கருத்துச் சோடிகள் தரப்பட்டுள்ளன. சோடி ஒன்றில் தரப்பட்டுள்ள முதலாம் இரண்டாம் கருத்துக்களுக்கிடையேயான தொடர்பினைப் பரிசீலனை செய்து 23 - 26 வரையான வினாக்களுக்கு விடை தருக

A- 1. இரண்டாம் உலகப் போர்
2. பிஸ்மார்க்கின் கொள்கை

B- 1. சர்வதேச சங்கம்
2. நாடுகளுக்கிடையே ஏற்படும் முரண்பாடுகளை சமாதானமாக தீர்த்தல்

C- 1. நாசிச வாதம்
2. ஜெர்மனிய இனத்தவரை உயர்வாகக் கருதி யூதர்களை அழித்தமை

D- 1. தனிப்பட்ட நிலவுரிமையை நீக்குதல்
2. ரஷ்யப் புரட்சி

23. முதலாவதை விளக்குவதாக இரண்டாவது அமையும் சோடி
(1) A (2) B (3) C (4) D

24. முதலாவது இரண்டாவதன் விளைவாகும்
(1) A (2) B (3) C (4) D

25. முதலாவதற்கும் இரண்டாவதற்கும் இடையே தொடர்பினைக் காட்டாத சோடி
(1) A (2) B (3) C (4) D

26. முதலாவதன் பணியினை இரண்டாவதில் காட்டும் சோடி
(1) A (2) B (3) C (4) D

27. கைத்தொழிற் புரட்சியின் போது இரு இடங்களை மின்கம்பி ஒன்றின் மூலம் இணைத்து அதன் மூலம் குறியீடுகளைப் பயன்படுத்தி செய்திகளைப் பரிமாறிய முறை.
(1) தொலைபேசி (2) வானொலி (3) தந்தி முறை (4) பெனீ தபால் சேவை

28. கீழே தரப்பட்டுள்ள நிகழ்வுகளுள் கைத்தொழிற் புரட்சியின் விளைவால் மனித இனத்தின் நீண்ட கால நிலைத்திருப்புக்கு பாரிய அச்சுறுத்தலாக அமைந்த விடயம்.
(1) ஏற்றுமதி இறக்குமதி பொருளாதாரம் (2) பல்தேசிய கம்பனிகளின் தோற்றம்
(3) சூழல் மாசடைதல் (4) அரசின் தலையிடாக் கொள்கை

29. கீழே தரப்பட்டுள்ள நிகழ்வுகளுள் கண்டி இராசதானி ஆங்கிலேயர் வசமாவதில் செல்வாக்குச் செலுத்திய ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் செயற்பாடுகளை மாத்திரம் கொண்ட விடையாக அமைவது.
A. ஆங்கிலேயரின் தந்திரோபாய நடவடிக்கை
B. மன்னனுக்கும் பிக்குமார்களுக்குமிடையிலிருந்த முரண்பாடுகள்
C. எஹலபொல குடும்பத்தினருக்கு மனிதாபிமானமற்ற முறையில் தண்டனை வழங்கியமை
D. ஆங்கிலேயரின் படையெடுப்பைத் தொடர்ந்து மன்னன் பாதுகாப்புக் கருதி தப்பியோடியமை
(1) AB (2) BC (3) CD (4) AD

30. இலங்கையின் சமய தேசிய மறுமலர்ச்சியின் போது ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்களின் பங்களிப்பு தொடர்பில் பொருத்தமற்ற கூற்றாக அமைவது
(1) பாடசாலைகளை ஆரம்பிப்பதற்காக மகாபோதி சங்கத்தை உருவாக்கியமை
(2) பௌத்த பாடசாலைகளை உருவாக்குவதில் முன்னோடியாக செயற்பட்டமை
(3) நாடு பூராகவும் சென்று போதனைகளை நிகழ்த்தி பௌத்தர்களை விழிப்பூட்டியமை
(4) வெசாக் பௌர்ணமி தினத்தை அரச விடுமுறை தினமாக்கியமை

31. கீழே A - D வரை தரப்பட்டுள்ள விடயங்களுள் ஆறுமுக நாவலர் அவர்களுடன் தொடர்புடைய விடயங்களை மாத்திரம் கொண்ட விடையாக அமைவது.
A. மத்ரஸா பாடசாலைகளை மறுசீரமைத்தமை
B. பெரிய புராணம், கந்த புராணம் என்பவற்றை மொழிபெயர்த்தமை
C. யாழ்ப்பாணத்தில் சைவ ஆங்கிலப் பாடசாலையை நிறுவியமை
D. பராபவ எனும் சிங்கள நாடகத்தை எழுதியமை
(1) AB (2) BC (3) CD (4) AD

32. இலங்கையின் விவசாய நடவடிக்கைகள் தொடர்பில் பொருத்தமற்ற கூற்றாக அமைவது.
(1) பாரம்பரிய விவசாயம் நுகர்வினை அடிப்படையாகக் கொண்டிருந்தமை
(2) விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான உழைப்பு அத்தம் முறையில் பெற்றுக் கொள்ளப்பட்டமை
(3) போர்த்துக்கேயரினால் இலங்கையில் முதன் முதலாக பெருந்தோட்டச் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டமை
(4) இலங்கையில் தேயிலைச் செய்கையை அறிமுகப்படுத்தியோர் ஆங்கிலேயராவர்

33. இலங்கையின் முதல் ஜனாதிபதி
(1) ஜே.ஆர் ஜயவர்தன (2) சேர். ஒலிவர் குணதிலக
(3) டி.எஸ். சேனாநாயக்க (4) சேர். வில்லியம் கொபல்லாவ

34. 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தம் ஒன்றாக அமைவது
    (1) இந்நாடு இலங்கை எனும் பெயரால் அழைக்கப்பட்டது
    (2) முதல் தடவையாக இலங்கை குடியரசாகியமை
    (3) விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை அறிமுகமானமை
    (4) நிர்வாகக் குழு முறை அறிமுகப்படுத்தப்பட்டமை

35. டாக்டர். எஸ்.ஏ. விக்கிரமசிங்க அவர்களால் உருவாக்கப்பட்ட அரசியல் கட்சி
    (1) இலங்கை சமசமாஜக் கட்சி (2) புரட்சிகர சமசமாஜக் கட்சி
    (3) இலங்கை பெடரல் கட்சி (4) இலங்கை கம்யூனிசக் கட்சி

36. இலங்கை நிர்வாகம் தொடர்பில் சட்டங்களைப் பிறப்பித்தல், நிதி முகாமைத்துவம், வரவு செலவு திட்டத்தை அங்கீகரித்தல் போன்ற பணிகளுடன் தொடர்புடைய நிறுவனம் எது
    (1) பொதுத்துறை (2) பாராளுமன்றம்
    (3) அமைச்சரவை (4) உயர்நீதிமன்றம்

- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அபிவிருத்திக்காக அரசினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் சில கீழே A, B, C, D என தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி 37, 38 ஆம் வினாக்களுக்கு விடை தருக
    A. முதலீடு தொடர்பான அரசின் கொள்கை
    B. கிராமியப் பிரதேசங்களில் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தல்
    C. ஏற்றுமதி பதனிடல் வலயங்களை உருவாக்கியமை
    D. தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக போட்டிப் பரீட்சைகளை நடாத்துதல்

37. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சமூக நலன்புரி நடவடிக்கைகளை மாத்திரம் கொண்ட விடையாக அமைவது
    (1) AB (2) BC (3) BD (4) CD

38. இலங்கையில் கைத்தொழில் மயமாக்கம் தொடர்பில் சரியான விடயங்களைக் கொண்ட விடையாக அமைவது
    (1) AC (2) BC (3) BD (4) AD

39. உணவு, நிலம், சமாதானம் எனும் சுலோகத்தை கொண்டமைந்த பிரதான புரட்சியாக அமைவது
    (1) கைத்தொழிற் புரட்சி (2) அமெரிக்க சுதந்திரப் போர்
    (3) பிரான்ஸியப் புரட்சி (4) ரஷ்யப் புரட்சி

40. இரண்டாம் உலகப் போர் ஏற்படுவதற்கு உடனடிக் காரணமாக அமைந்த நிகழ்வு
    (1) சரஜிவோ நிகழ்வு (2) ஆஸ்திரியா சேர்பியா மீது யுத்தப் பிரகடனம் செய்தல்
    (3) ஜேர்மனி போலந்தை ஆக்கிரமித்தல் (4) ஜப்பான் பேர்ள் துறைமுகத்தைத் தாக்கியமை

*****

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

33	T	II

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர் - 2022 (2023)
G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

විනාප්පත්‍රිරත්තෙ වාසිත්තු, විනාක්කළෙත් තෙරිවුසෙය්වතර්කුම් විටෙ එළුතුම්පෝතු විනාක්කළෙ ඔළුංකමෙත්තුක් කොළ්වතර්කුම් මේලතික වාසිප්පු නේරත්තෙප් පයන්පටුත්තුක.

வரலாறு II **நேரம்: 3 மணித்தியாலம்**

- பகுதி – I இல் முதலாம் வினா கட்டாயமானது
- பகுதி – II இல் நான்கு வினாக்களுக்கும், பகுதி III இல் ஒரு வினாவிற்கும் விடையளிக்குக
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடையளிக்குக.

1 (அ)

i. கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
மல்வத்து ஓயா, கிரிந்தி ஓயா, கல்லோயா நீர்த்தேக்கம், மின்னேரியாக் குளம், மன்னார், லங்காபட்டுன, தம்பதெனிய, திருக்கேதீஸ்வரம், விக்டோரியா நீர்த்தேக்கம், ஆனையிறவு, நீர்கொழும்பு, காலி (12 புள்ளிகள்)

ii. கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
பாரசீக வளைகுடா, மக்கா, ஜெனோவா, கலிகட், ஜாவா தீவு, தென்கொரியா

(ஆ)

i. கீழே ABCD எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. பொலன்னறுவை இராசதானியின் ஆரம்ப ஆட்சியாளன்
B. சீதாவாக்கை இராஜசிங்கன் கண்டியை ஆக்கிரமித்த போது அங்கிருந்த ஆட்சியாளன்
C. இலங்கையில் தரையிறங்கிய முதல் போர்த்துக்கேயன்
D. வேர்சேல்ஸ் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பிரித்தானிய பிரதமர் (4 புள்ளிகள்)

- A , B ஆகிய எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.



உரு A

ii.
1. இப்படத்தில் காட்டப்படுவது யாது?
2. இது யாரால் எழுதப்பட்டுள்ளது?
3. இச்சாசனம் எவ்வூடகத்தால் ஆக்கப்பட்டுள்ளது
4. இம்மூலாதாரத்தின் ஊடாக வெளிப்படுத்தப்படும் தகவல் யாது? (4 புள்ளிகள்)



உரு B

iii.
1. இவ்வுருவிலுள்ள நபரின் பெயரைக் குறிப்பிடுக
2. இவர் வகித்த பதவிக்கமைய இவருடைய பதவிப் பெயர் யாது?
3. இவர் எந்நாட்டின் ஆட்சியாளர் ஆவார்?
4. இவர் ஆட்சியில் இருந்த போது அந்நாட்டை ஆக்கிரமித்த ஐரோப்பிய நாட்டவர் யார்? (4 புள்ளிகள்)

பகுதி II

2 .

i. தொல்பொருள் மூலாதாரங்களின் வகைகள் மூன்றினைக் குறிப்பிடுக (3 புள்ளிகள்)

ii. கீழே A-D வரை தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவுக்குமுரிய விடைகளை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறையே எழுதிக் காட்டுக

A. பௌத்த இராச்சியம் பற்றிய நூலை எழுதிய எழுத்தாளர்

B. இலங்கையின் பண்டைய கலாசார மரபுரிமைகளை தேடி வெளிக்கொணர்ந்த வெளிநாட்டவர்

C. பொலன்னறுவை கால நாணயம் ஒன்று

D. இலங்கையில் எழுதப்பட்ட ஆரம்ப கல்வெட்டு வகை

(குன்றுக் கல்வெட்டு, ஹென்றி பாக்கர், பாகியன், குகைக் கல்வெட்டு, மத்திய கால தங்க நாணயம், தம்பமஸ்ஸ)

(4 புள்ளிகள்)

iii. வரலாற்றைக் கற்கும் போது இலக்கிய மூலாதாரங்களின் பயன்கள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளிகள்)

iv. தொல்பொருள் மூலாதாரங்கள் அழிவடைவதில் தாக்கம் செலுத்தும் மானிட செயற்பாடுகள் மூன்றினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக

(6 புள்ளிகள்)

3.

i. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த தாழ்நில உலர் வலயக் குகைகள் மூன்றினைக் குறிப்பிடுக

(3 புள்ளிகள்)

ii. A - வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் கேத்திர கணித வடிவ கல்லாயுதங்களை தயாரிப்பதற்காக பயன்படுத்திய பாறை வகைகள் இரண்டினைக் குறிப்பிடுக

(2 புள்ளிகள்)

B - இவர்களது மரணச் சடங்கு முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக (2 புள்ளிகள்)

iii. முன்வரலாற்றுக் கால மனிதன் தொழிநுட்பத்தைப் பயன்படுத்திய சந்தர்ப்பங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக

(5 புள்ளிகள்)

iv. ஆரம்ப வரலாற்றுக் கால பொருளாதார நடவடிக்கைகளின் பிரதான பிரிவுகள் மூன்றினைக் குறிப்பிட்டு, மூலாதாரங்களின் ஊடாக விளக்குக.

(6 புள்ளிகள்)

4.

i.

A. புராதன காலத்தில் கால்வாய்களை அமைக்கும் பணிகளில் ஈடுபட்ட அதிகாரி

B. ஆரம்ப காலத்தில் பிக்குமார் தங்குவதற்காக தானமளிக்கப்பட்ட ஆராமை வகை

C. அலைகளால் குளக்கட்டு அரிப்புறுவதைத் தடுப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட குளத்தின் பகுதி (3 புள்ளிகள்)

ii.

A. மல்வத்து ஓயா நதியை அண்டி அமையப் பெற்றுள்ள குளங்கள் இரண்டினையும்,

B. மகாவலி கங்கையை அண்டி அமையப் பெற்றுள்ள குளங்கள் இரண்டினையும் குறிப்பிடுக

(4 புள்ளிகள்)

iii. முற்கால இலங்கையில் இரும்பை பிரித்தெடுத்தமைக்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ள பிரதேசங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு, அங்கு பின்பற்றப்பட்டுள்ள தொழினுட்பத்தை விளக்குக

(5 புள்ளிகள்)

iv. இலங்கையின் குள நிர்மாணிப்பின் வளர்ச்சிப் படிமுறைகள் மூன்றினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

5.

i. "விஜயபாகு கொள்ளையின்" பின்னர் கோட்டை இராசதானி மூன்றாக பிளவுற்றது. அவற்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. கீழே A - D வரை தரப்பட்டுள்ள விடயங்களுக்கு பொருத்தமான விடையினை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறையே எழுதிக் காட்டுக

A. கி.பி 1550 இல் போர்த்துக்கேயர் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த கோட்டையின் ஆட்சியாளன்

B. கி.பி 1565 இல் கோட்டை நகரைக் கைவிட்டு கொழும்புக் கோட்டையில் தங்கியிருந்த மன்னன்

C. கி.பி 1594 இல் கண்டியை ஆக்கிரமித்த போர்த்துக்கேய தளபதி

D. கி.பி 1619 இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேய தளபதி (4 புள்ளிகள்)

(மாயாதுன்னை, பிலிப் த ஒலிவேரா, 7ஆம் புவனேகபாகு, பேரோ லோபேஸ்த சூசா, தர்மபாலன்)

iii. போர்த்துக்கேயர் கண்டியைக் கைப்பற்றுவதற்கு மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்தமைக்கு ஏதுவான காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக (5 புள்ளிகள்)

iv. சீதாவாக்கை இராசதானியின் அரசியல் அதிகாரம் வளர்ச்சியடைந்தமையில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டினையும், அதன் வீழ்ச்சிக்கு ஏதுவாய் அமைந்த காரணி ஒன்றினையும் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

(6 புள்ளிகள்)

6.

i. ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டு இலங்கைக்கு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை அறிமுகப்படுத்திய ஐரோப்பிய இனத்தவரைப் பெயரிட்டு, அவர்களால் இலங்கையில் பயிரிடப்பட்ட இரு பயிர்களையும் குறிப்பிடுக

(3 புள்ளிகள்)

ii. இலங்கையின் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய கோல்புறூக்கின் சீர்திருத்தங்கள் நான்கினைக் குறிப்பிடுக

(4 புள்ளிகள்)

iii. நீண்ட காலமாக இலங்கை பிரித்தானியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தமையின் காரணமாக இந்நாட்டிற்கு ஏற்பட்ட பாதகமான விளைவுகள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக

(5 புள்ளிகள்)

iv. சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் இலங்கையின் வர்த்தக விவசாய, வளர்ச்சி கருதி மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக

(6 புள்ளிகள்)

7.

i.

A. இரு சபை கொண்ட பாராளுமன்றம்

B. அரசுக் கழகம்

C. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை

போன்ற சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்திய அரசியல் யாப்புக்களை முறையே குறிப்பிடுக

(3 புள்ளிகள்)

ii. கி.பி 1956 இல் அதிகாரத்திற்கு வந்த புதிய அரசாங்கம் அறிமுகப்படுத்திய சீர்திருத்தங்கள் நான்கினைக் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

iii. 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் பிரதான பண்புகள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக (5 புள்ளிகள்)

iv. சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் கல்வித் துறை வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூன்றினை சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

பகுதி III

8.

i.

A. மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு ஏதுவாயமைந்த துருக்கியரால் கைப்பற்றப்பட்ட நகரம்
B. மறுமலர்ச்சி தோற்றம் பெற்ற நகரம்
C. மறுமலர்ச்சியின் காரணமாக வளர்ச்சியடைந்த வர்த்தக நகரமொன்று
ஆகியவற்றை முறையே குறிப்பிடுக

(3புள்ளிகள்)

ii. மறுமலர்ச்சி காலப்பகுதியில் கத்தோலிக்க குருமாரின் ஆதிக்கத்தை விமர்சனம் செய்த நபர்கள் இருவரையும், அக்காலப்பகுதியில் தோற்றம் பெற்ற எழுத்தாளர்கள் இருவரையும் பெயரிடுக

(4 புள்ளிகள்)

iii. மறுமலர்ச்சிக் காலத்தில் கலைத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக (5 புள்ளிகள்)

iv. மறுமலர்ச்சி காரணமாக இலங்கையில் பின்வரும் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் தலா ஒவ்வொன்றினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக

(6 புள்ளிகள்)

A. அரசியல்
B. பொருளாதாரம்
C. சமூக கலாசாரம்

9.

i. A. அமெரிக்கா எனும் பதிய உலகைக் கண்டுபிடித்தவரையும்
B. தென்னமெரிக்காவில் குடியேற்றங்களை நிறுவிய இரு ஐரோப்பிய இனத்தவரையும்
AB எனும் ஒழுங்கில் எழுதிக் காட்டுக

(3 புள்ளிகள்)

ii. அமெரிக்க சதந்திரப் போர் ஏற்படுவதற்கு ஏதுவாயமைந்த காரணிகள் இரண்டினையும், அமெரிக்க சுதந்திரப் போரின் விளைவுகள் இரண்டினையும் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

iii. பிரான்சியப் புரட்சி ஏற்பட்டமைக்கு ஏதுவான அரசியல் காரணமொன்றினையும், சமூகக் காரணி ஒன்றையும் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக

(5 புள்ளிகள்)

iv. பிரான்சியப் புரட்சி மற்றும் ரஷ்யப் புரட்சியில் காணக்கூடிய பொதுப் பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக (6 புள்ளிகள்)




N
Indian Ocean
Africa

*****